**ஜனவரி - 10**

**"என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்." - யாக் 5:10**

சரியான வழி இன்னும் தன்னையே தாழ்த்துகிறதும், தன்னல மறுப்பும் கொண்டதுமான நெருக்கமான வழிதான் அதாவது, சாந்த குணத்தின் வழி, தாழ்மையின் வழி அதில் நடக்க முந்திய வருஷத்தைப்போல, அவ்வளவு மிக அதிகமான முயற்சியும் கிருபையும் வேண்டியிருக்கும். ஒருவேளை அதைவிட அதிகமான முயற்சியும் கிருபையும் வேண்டியிருக்கலாம். கிருபையிலும் அறிவிலும் நாம் அதிகமாக வளரும்போது, தற்புகழ்ச்சி செய்யவும், கர்வமடையவும் துணிகரமுள்ளவர்களாயிருக்கவும் அகந்தை கொள்ளவும், முன்பு ஏற்பட்டதைவிட பலமான சோதனைகள் உண்டாகும். விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், அன்பிலும் கர்த்தருடைய ஊழியத்தில் செயல்படுதலிலும், அதிகமாக நாம் விருத்தியடையும் போது, அதிகமாக அவனுடைய ஒற்றர்கள் நம்மைப்பற்றி அவதூறாகப் பேசுவார்கள், புறங்கூறுவார்கள் பொதுவாக நமக்குத் தீங்கு செய்ய நாடுவார்கள். **– Z ’95, 3 (R 1751).**

தேவனுடைய பிரதிநிதிகள் மிகவும் அதிகமாக நிந்தனைக்கு இலக்காகிறார்கள். மிகவும் அதிகமாக துன்பப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் தேவனைப்போல, மிகவும் பொறுமையுடன் சகிக்கிறார்கள். இவ்விஷயத்தில் கர்த்தருடைய ஜனங்களாகவும், பிரதிநிதிகளாகவும் ஆகப்போகிறவர்களுக்காக, அவர்கள் பின்பற்றத் தகுதியான ஒரு மாதிரியை கொடுத்திருக்கிறார்கள். கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றி பிரயோஜனமடைவார்கள். அதனால் கர்த்தருடைய நாமமும் மகிமைப்படும். **-P ’34, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**2தீமோ 3:16; 1பேது 1:11; 2பேது 1:20,21; 2கொரி 4:16-18; 2தீமோ 2:10-12; 1பேது 3:13-18; 4:13-19; மத் 5:10-12; 23:34,37; லூக் 6:22,23,26; அப் 5:41;7:52; 2நாளா 36:16; நெகே 9:26; 1தெச 2:15; யோபு 1:22; 2:10; 42:10.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 312 (R 5332).**

**வினாக்கள் : தீமையைச் சகிப்பதில் தீர்க்கதரிசிகளின் முன்மாதிரி இந்த வாரத்தில் எனக்குச் செய்த நன்மை என்ன? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதில் இடையூறாயிருந்ததும் உதவியாயிருந்ததும் எவை?**